# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **மொகலாயர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## மொகலாயர்கள்

Ø மொகலாயப் பேரரசுக்கான அடித்தளத்தை இந்தியாவில் உருவாக்கியவர் பாபர்.

### பாபர் (கி.பி.1526-1530)

Ø மத்திய ஆசியாவில் உள்ள பர்ஹானா நிலப்பகுதியை ஆட்சி செய்த **உமர்சேக் மிர்சா** என்பவருக்கு **கி.பி.**1483 ல் மகனாக பிறந்தார்.

Ø இவரது இயற்பெயர் **சாகிருதீன் முகமது**

Ø தந்தை வழியில் தைமூர் இனம். தாய் வழியில் செங்கிஸ்தான் இனம் கி..பி.1494ல் தனது 11**வது** வயதில் **பர்ஹானாவின்** ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

### படையெடுப்புகள்

### முதல் பானிப்பட்போர்.

Ø கி.பி.1526 - ஏப்ரல் 21

Ø **இப்ராஹிம் லோடிக்கும் பாபருக்கும்** இடையே நடந்தது.

Ø பாபர் வெற்றிபெற்றார்.

Ø பாபரின் **பீரங்கி படை** இப்போரில் முக்கியப் பங்கு வகித்தது.

Ø சுல்தானியர் ஆட்சி முடிவுற்றது.

**கன்வா போர்**

- கி.பி.1527
- **பாபர்** - **ராணாசங்கா** இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் பாபர் வெற்றிபெற்றார். வெற்றிக்கு பிறகு **காஸி** என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டார்,

**சந்தேரி போர் (கி.பி.**1528)

- பாபர் - முகமது லோடி இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் பாபர் வெற்றிபெற்றார்.

**ஹுமாயுன் கி.பி** 1530-1540)

- பாபரின் மூத்த மகன்.
- முகலாய மன்னராக 1530**ல்** பதவியேற்றார்.

**சவுசா போர் (கி.பி.**1539)

- சொர்கான் - ஹுமாயுன் இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் சொர்கான் முகலாய படைகளை நசுக்கினார்.

**கன்னோசிப்போர் (கி.பி.**1540)

- **சொர்கான்** - **ஹுமாயூன்** இவர்களுக்கிடையே நடைபெற்றது. இப்போரில் ஹுமாயூன் தோல்வியடைந்தார்.
- ஹுமாயூன் வாழ்க்கை முழுவதும் தடுமாறினார் - **லேன்பூல்** கூற்று
- ஹுமாயூன் கி.பி.1556ல் மரணம் அடைந்தார்.

Ø இறப்பதற்கு முன் தனது மகன் அக்பரை வாரிசாக நியமனம் செய்து பைராம்கானை பாதுகாப்பாளராக நியமித்தார்.

**ஷெர்ஷா சூர்**(**கி.பி.**1540 - 1545)

Ø இயற்பெயர் **பரீத்**.

Ø ஆப்கானிய கவர்னரால் **ஷெர்கான்** என்ற பட்டத்தினை பெற்றார். இவரால் நிறுவப்பட்ட பேரரசு **சூர் வம்சம்** என அழைக்கப்பட்டது.

**ஷெர்ஷாவின் நிர்வாகம்**

Ø இவரது அமைச்சரவையில் நான்கு முக்கிய அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தனர்.

1.திவானி-இ-விசாரத் - வரவு மற்றும் செலவு பொறுப்பாளர்

2.திவானி-இ-ஆரீஷ் - இராணுவ பொறுப்பாளர்

3.திவானி-இ-ரசாவத் -வெளியுறவு மற்றும் தூதரக பொறுப்பாளர்

4.திவானி-இ-இன்சா - அரசு ஆணைகள் மற்றும் கடித போக்குவரத்து பொறுப்பாளர்

**நிர்வாக அமைப்பு**

Ø பேரரசு - சர்கார் - பர்கானா - கிராமம்

Ø மாநில நிர்வாகத்தின் கடைசி அங்கம் கிராமம்

Ø நிலவருவாய் முக்கிய இடம்பெற்றது.

Ø **ரயத்துவாரி** முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

Ø **அக்பரின் முன்னோடி** என அழைக்கப்பட்டார்.

Ø குதிரைப்படையில் குதிரைகளுக்கு சூடுபோடும் “**தாக்**” முறையை அறிமுகப்படுத்தினார்.

Ø **நவீன நாணய முறையின் தந்தை** என அழைக்கப்பட்டார்.

Ø நாணயங்களில் தனது பெயரை **தேவநாகிரி** எழுத்தில் பொறிக்கச் செய்தார்.

Ø டெல்லியில் புகழ்பெற்ற **புராணகிலா** என்ற சிறந்த கட்டிடத்தை உருவாக்கினார்.

**இரண்டாம் பானிபட் போர்** ( **கி.பி.**1556)

Ø **ஹெமு - அக்பர்** இவர்களுக்கிடையே நடைபெற்றது.

Ø இப்போரில் **ஹெமு** தோல்வியடைந்தார்.

Ø அக்பரின் வளர்ப்புத் தாய் **மாகம் அனாகா**.

Ø இவரது காலம் அந்தப்புர அரசாங்க காலம் என அழைக்கப்படுகிறது.

**அக்பரின் ஆட்சி நிர்வாகம்**

Ø **அக்பர்**, **இராஜாமான்சிங்**, **இராஜபகவான்தாஸ்**, **இராஜா தோடர்மால்**, **மற்றும் பீர்பால்** போன்றவர்களை உயர் பதவியில் அமர்த்தினார்.

Ø 1562 இல் **ஜிசியா** மற்றும் புனித பயண வரியினை இரத்து செய்தார்.

Ø **அபுல்பைசி**, **இராமாயணம்** மற்றும் **மகாபாரதத்தை** பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார்.

Ø அக்பரின் அவையை அலங்கரித்த இசைஞானி தான்சேன்.

Ø 1575 இல் அக்பர் பதேப்பூர் சிக்ரியில் **இபாதத் கானா** என்ற வழிபாட்டுக் கூடத்தை அமைத்தார்.

Ø 1579 இல் **தவறுபடா ஆணையினை** பிரகடனப்படுத்தியவர்.

Ø கி.பி.1582ல் **தீன்இலாஹி அல்லது தெய்வீக மதத்தை** வெளியிட்டார்.

Ø **இராஜா தோடர்மால்** அக்பரது ஆட்சிக் காலத்தில் நில வருவாய் நிர்வாகத்தில் சீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

Ø விவசாயிகளும், அரசாங்கமும் நிலவரி தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தம் **குபிலியாத்** எனப்பட்டது.

Ø மொகலாயரின் இராணுவம் மற்றும் பொது நிர்வாக முறைக்கு அடிப்படையாக அமைந்தது. **மன்சப்தாரி முறை**.

Ø குஜராத் வெற்றியின் நினைவாக அக்பர் எழுப்பிய கட்டடம் **பதேபூர் சிக்ரி**.

**ஜஹாங்கீர் (உலகினை வெல்பவர்)** (1605-1677)

Ø அக்பரின் மூத்த மகன் .

Ø கி.பி.1605ல் அரியணை ஏறினார்.

Ø 1611 ஆம் ஆண்டு ஜஹாங்கீர் மெஹருனிசாவை மணந்து கொண்டார். அவர் **நூர்ஜஹான்** (**உலகின் ஒளி**) என்று அழைக்கப்பட்டார்.

Ø இவரது ஆட்சியில் இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆங்கில வணிகக்குழு சார்பாக தளபதி **வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர்தாமஸ் ரோ** ஆகியோர் முகலாய அரசவைக்கு வருகை புரிந்தனர்.

Ø **கி.பி.**1615**ல்** சூரத் நகரில் வணிகம் செய்ய **சர்தாமஸ் ரோ** ஜஹாங்கிரிடம் அனுமதி பெற்றார்.

**இலக்கியப்பணி**

Ø ஜஹாங்கீர் தலைசிறந்த அறிஞர் .

Ø நீதித்துறையில் சிறந்து விளங்கினார்.

Ø **நீதிச்சங்கிலி மணி** என்ற புதிய முறையை அறிமுகப்படுத்தினார்.

Ø நீதிமணி **ஷாபர்ஷ்** அரண்மனையில் ஒருமுனையில் கட்டப்பட்டு மறுமுனை யமுனை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டிருந்த கல்தூணில் இணைக்கப்பட்டிருந்தது. (பண்டைய தமிழகத்தில் மனுநீதிச் சோழன் நீதிச்சங்கிலி முறையை கொண்டுவந்தார்.)

**நூர்ஜஹான்**

Ø இயற்பெயர் **மெஹருன்னிசா**

Ø இளம்பருவத்தில் **ஷெர்ஆப்கன்** என்பவரை மணந்து ஒரு பெண் குழந்தைக்கு தாயானார்.

Ø கணவரின் மறைவிற்கு பிறகு **கி.பி.**1611**ல் ஜஹாங்கீரை** மணந்தார்.

Ø **நூர்மஹால்** (**அரண்மனையின் ஒளி**) என்ற சிறப்பு பெயரையும் **நூர்ஜஹான் அல்லது உலகின் ஒளி** என்ற சிறப்பு பெயரையும் பெற்றார்.

Ø கி.பி.1611 முதல் கி.பி.1626 வரையிலான காலம் முகலாய வரலாற்றில் **நூர்ஜஹானின் காலம்** எனப்பட்டது.

**ஷாஜஹான்** (1627-1658)

Ø ஜஹாங்கீர் மகனான **குர்ரம்** வரலாற்றில் **ஷாஜஹான்** என அழைக்கப்படுகிறார்.

Ø குர்ரம் **உலகின் அரசன்** (ஷாஜஹான்) என அழைக்கப்பட்டார்.

Ø போர்ச்சுக்கீசியர்களுக்கு எதிராக போரிட்டார்.

Ø தக்காணத்தின் ஆளுநராக தனது மூன்றாவது மகன் **ஔரங்கசீப்பை** நியமனம் செய்து திறம்பட நிர்வாகம் செய்தார்.

Ø பேரரசர் ஷாஜஹானின் காலம் "**மொகலாயர்களின் பொற்காலம்**" என்றழைக்கப்படுகிறது.

Ø கட்டடக்கலையின் விந்தைகள் இப்பேரரசின் பொருளாதார செழிப்பினை பறைசாற்றும்.

Ø பேரரசர் ஷாஜஹான் **கட்டடக்கலையின் இளவரசர்** என்றும் **பொறியாளர் பேரரசர்** என்றும் சிறப்புடன் அழைக்கப்படுகிறார்.

Ø தான் கட்டிய மாளிகைகளுக்கு சிவப்பு கற்களுக்கு பதிலாக **வெள்ளை பளிங்கு கற்களை** பயன்படுத்தினார்.

Ø **ஷாஜஹானாபாத்** என்ற புதிய தலைநகரை உருவாக்கினார்.

**Ø** டில்லியில் கண்கவரும் **செங்கோட்டையை** உருவாக்கினார்.

**Ø** புகழ்மிக்க பெருமை வாய்ந்த "**ஜிம்மா மசூதியை**" வெள்ளை பளிங்கு கற்களால் கட்டினார்.

**Ø** இது உலகிலேயே மிகப்பெரிய பள்ளி வாசல்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

**Ø** உலக அதிசயங்களில் ஒன்றாக விளங்குகின்ற வரலாற்று புகழ்மிக்க **தாஜ்மகாலைக்** கட்டி முடித்த பெருமை பேரரசர் ஷாஜஹானையே சாரும்.

**Ø** இந்த நினைவுச் சின்னம் யமுனை ஆற்றங்கரையில் **ஆக்ரா** நகரில் தனது அன்பு மனைவி **மும்தாஜின்** நினைவாக கட்டப்பட்டதாகும்.

**Ø** இம்மாளிகை பளிங்குக் கற்களின் கனவுலகமாக கருதப்படுகிறது.

**Ø** **உஸ்தாத் இஷா** என்ற தலைமை சிற்பியின் மேற்பார்வையில் சுமார் 22 ஆண்டுகள் கடின உழைப்பில் சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் தாஜ்மஹால் கட்டப்பட்டதாக அறியப்படுகிறது.

**Ø** ஷாஜஹான் **முத்து மசூதி** என்று அழைக்கப்படுகின்ற **மோதி பள்ளி வாசலை** ஆக்ராவில் கட்டி முடித்தார்.

**Ø** விலைமதிப்பற்ற அரிய வகை கற்கள் மூலம் மயிலாசனத்தை உருவாக்கி புகழ் பெற்ற **கோகினூர் வைரத்தை** அதில் பதிக்கச் செய்தார்.

**Ø** இதனை பாரசீக படையெடுப்பாளர் **நாதிர்ஷா கி.பி.**1739 ஆம் ஆண்டு எடுத்துச் சென்றார்.

**Ø** இவரது ஆட்சியின் போது இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த **பெர்னியர்**, **டிராவர்னியர்**, **மற்றும் மனுசி** என்ற இத்தாலியரும் ஷாஜஹானைப் பற்றி மிகச் சிறந்த வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர்.

**ஔரங்கசீப்** (**கி.பி**.1658 - **கி.பி**.1707)

Ø இவர் ஷாஜஹானின் மூன்றாவது மகன்.

Ø முகலாய வம்சத்தின் கடைசி வலிமை வாய்ந்த மன்னர்.

Ø ஔரங்கசீப் "**ஆலம்கீர்**" என்ற பட்டத்தினை தனக்குத் தானே சூட்டிக் கொண்டார்.

Ø ஒன்பதாவது சீக்கிய **குரு தேஜ்பகதூரை** தூக்கிலிட்டார்.

Ø பத்தாவது சீக்கிய குரு **குரு கோவிந்தசிங்**. **கல்சா** என்ற இராணுவ அமைப்பினை உருவாக்கி ஔரங்கசீப்பை இறுதிவரை எதிர்த்தார்.

Ø மராத்திய தலைவர் **சிவாஜியை** அழிக்க தக்காணத்தின் ஆளுநரான **செயிஷ்டகானை** ஔரங்கசிப் நியமித்தார்.

Ø **தக்காண புற்றுநோய்** ஔரங்கசிப்பை அழித்தது.

Ø ஔரங்கசீப்பின் தீவிர சமயக்கொள்கை, அகன்ற பேரரசு, யார் மீதும் நம்பிக்கை இல்லாத தன்மை, தக்காணத்தில் நீண்ட காலம் போரில் ஈடுபட்டது, தன்னை அழித்ததோடு மட்டுமல்லாமல், பாபரால் உருவாக்கப்பட்ட வலிமை மிகுந்த முகலாய பேரரசையே வீழ்ச்சி அடையச் செய்தது. முகலாய பேரரசின் வீழ்ச்சிக்கு ஔரங்கசீப்பின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**முகலாயர்களின் ஆட்சிமுறை**

Ø பேரரசு - **மாகாணங்கள்** - **சுபா** - **சர்க்கார்** - **பர்கானாக்கள்** - **கிராமங்கள்** என பிரிக்கப்பட்டன.

Ø இராணுவம் சார்ந்த வல்லாட்சி நடைபெற்றது.

Ø பேரரசர் இறைவனின் நிழலாக பூமியில் கருதப்பட்டார்.

Ø பேரரசருக்கு உதவிட அமைச்சரவை இருந்தது. **வசீர் அல்லது தலைமை அமைச்சர்** முக்கிய அமைச்சராக கருதப்பட்டார்.

Ø நிர்வாக வசதியை கருதி, பேரரசு பல்வேறு மாகாணங்களாக பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றை "**சுபா**" என்று அழைத்தனர்.

Ø சுபாவினை நிர்வாகம் செய்தவர் "**சுபேதார்**" என்று அழைக்கப்பட்டார்.

Ø அக்பரின் காலத்தில் பேரரசு 15 சுபாக்களாக பிரிக்கப்பட்டிருந்தது.

Ø சுபேதார் **சிவில் மற்றும் இராணுவ** அதிகாரங்களை பெற்றிருந்தார்.

Ø சுபாக்கள் பல்வேறு சர்க்கார் அல்லது மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருந்தது.

Ø **பவுஜ்தார்** சர்க்காரின் ஆட்சியாளர் ஆவார்.

Ø சர்க்கார் பல **பர்கானாக்களாக** பிரிக்கப்பட்டது.

Ø **கிராமங்கள்** மாநிலங்களின் கடைசி பிரிவு

Ø **பிராமினி** கிராமத்தின் அதிகார நிர்வாகியாக இருந்தார்.

## வருவாய் நிர்வாகம்

Ø பேரரசின் முக்கிய வருவாய் **நிலவரியாகும்**.

Ø **இராஜாதோடர்மால்** வருவாய்த்துறை அமைச்சர்

Ø அக்பர் ஜாதி முறையை அறிமுகப்படுத்தினார்

Ø ஷெர்ஷா **அக்பரின் முன்னோடி** என்று கருதப்படுகிறார்.

## இராணுவ நிர்வாகம்

Ø முகலாய பேரரசில் இராணுவம், தரைப்படை, குதிரைப்படை, யானைப்படை மற்றும் பீரங்கிப்படையினை உள்ளடக்கி இருந்தது.

Ø இவற்றில் குதிரைப்படை முக்கிய பங்கு வகித்தது.

Ø அக்பர் **மன்சப்தாரி** முறையை அறிமுகப்படுத்தினார்

Ø மன்சப் என்றால் **தரம் அல்லது இடம்** என்பது பொருள்.

- Ø மன்சப்தார்கள் 10 **முதல்** 10000 குதிரைகள் வரை வைத்திருந்தனர்.
- Ø பேரரசருக்கு உதவுவது இவர்களின் முக்கிய கடமையாகும்.

**நீதி நிர்வாகம்**

- Ø பேரரசர் நீதியின் ஊற்றாக கருதப்பட்டார்.
- Ø **தலைமைக்காசி** பேரரசருக்கு நீதி பரிபாலனம் செய்ய உதவினார்.
- Ø புனித நூலான **குர்ஆனின்** உதவி கொண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்தன.

**********